பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

10 02 2025 **MONDAY** 12 40 **PM**

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- குழந்தைகள் தங்களுக்கு விருப்பமான துறைகளில் கல்வி கற்று முன்னேற பெற்றோர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- நாட்டின் பாதுகாப்பு தளவாட ஏற்றுமதி 21 ஆயிரம் கோடி ரூபாயை எட்டியுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.
- வங்கிகளில் தங்க நகை மீதான கடனை, திருப்பி செலுத்த இயலாதவர்களின் நகையை ஏலம் விடுவதற்கு போதிய விதிமுறைகள் பின்பற்றப்படுவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.
- நாட்டின் வடமேற்கு மத்திய மற்றும் கிழக்கு பகுதிகளில் அடுத்த 3 நாட்களுக்கு குறைந்தபட்ச வெப்பநிலையில் மாற்றம் இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- தமிழகத்தில் காலியாக உள்ள 2 ஆயிரத்து 642 மருத்துவர் காலிப் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>>

கல்வியை பொறுத்தவரை குழந்தைகள் தங்களுக்குப் பிடித்த பாடங்களை படிப்பதற்கு பெற்றோர் அனுமதிக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

பொதுத்தேர்வுகளை மாணவர்கள் மன அழுத்தமின்றியும், அச்சமின்றியும் எதிர்கொள்வது குறித்து மாணவர்களுடன் பிரதமர் இன்று கலந்துரையாடினார்.

குழந்தைகள் தங்களுக்குப் பிடித்த பாடங்களை ஆர்வத்துடன் படித்தால் மட்டுமே அவர்களது எதிர்காலம் சிறந்ததாக அமையும் என்றும் அவர் கூறினார்.

அழுத்தமான சூழ்நிலைகளில் மாணவர்கள் நேர்மறையாக சிந்திக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

நேர மேலாண்மையை அறிந்து, தங்களது தினசரி நடவடிக்கைகளை மாணவர்கள் திட்டமிட்டு செயல்பட வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

அன்னையின் பெயரில் மரம் நடும் வழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக் கொண்டார்.

ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து உணவுகளுக்கு மாணவர்கள் முக்கியத்துவம் தர வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

உணவு பழக்கங்களை பொறுத்தவரை உடல் ஆரோக்கியத்திற்கு கேடு விளைவிக்கும் நொறுக்கு தீனிகளை தவிர்ப்பது நல்லது என்றும் அவர் கூறினார்.

இந்திய கலாச்சாரத்துடன் கூடிய வேதங்களில் கூறப்படும் அன்னதத்தா முறையை கடைபிடிக்க வேண்டும் என்று மாணவர்களுக்கு அவர் அறிவுறுத்தினார்.

மாணவர்கள் தேர்வு காலத்தில் போதிய படிப்புடன், உணவு மற்றும் தூக்கத்திற்கு முக்கியத்துவம் அளித்து கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்று பிரதமர் வலியுறுத்தினார்.

பிரதமர் மாணவர்களுடன் கலந்துரையாடிய நிகழ்ச்சி பயனுள்ளதாகவும், வழிகாட்டும் வகையிலும் அமைந்தது என்று மாணவர் ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - மாணவர் 45 செகண்ட்ஸ்)

<<<<<>>>>>>

நாட்டின் பாதுகாப்பு தளவாட ஏற்றுமதி 21 ஆயிரம் கோடி ரூபாயை எட்டியுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

பெங்களூருவில் இன்று ஏரோ இந்தியா விமான கண்காட்சியை அவர் தொடங்கி வைத்துப் பேசினார்.

உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடாக இந்தியா எப்போதும் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு முன்னுரிமை தந்து வருவதாக அவர் தெரிவித்தார்.

பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்கள் உத்தரபிரதேசத்தில் நடைபெற்று வரும் மகாகும்பமேளாவில் பங்கேற்று புனித நீராடி வருவதாக தெரிவித்த அமைச்சர், ஏரோ இந்தியா கண்காட்சியும் இன்னொரு மகாகும்பமேளாவாக திகழ்வதாக கூறினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் வளர்ச்சி மற்றும் பாரம்பரியத்தின் ஒருங்கிணைப்பு எனும் தாரக மந்திரத்தை இது பிரதிபலிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் உந்துசக்தியாக பாதுகாப்பு தொழில்துறை விளங்குகிறது என்று திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

ஏரோ இந்தியா கண்காட்சி வரும் 14ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இதற்கிடையே, இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற **Fiji** மற்றும் தெற்கு சூடான் பாதுகாப்பு அமைச்சர்களை சந்தித்து இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்து திரு. ராஜ்நாத் சிங் பேச்சுவார்த்தை மேற்கொண்டார்.

<<<<<>>>>>>

வங்கிகளில் தங்க நகை மீது கடன் வாங்கி, திருப்பி செலுத்த இயலாதவர்களின் நகையை ஏலம் விடுவதற்கு அரசு போதிய விதிமுறைகளை செயல்படுத்தி வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது துணைக் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், வங்கியல்லாத நிதிநிறுவனங்கள் மற்றும் வர்த்தக வங்கிகள் இந்த நடைமுறையிலேயே செயல்படுவதாக குறிப்பிட்டார்.

ஏலம் விடுவது குறித்து சம்மந்தப்பட்டவர்களுக்கு முன்னரே தகவல் அனுப்பப்படுவதாகவும், அதன் அடிப்படையிலேயே ஏலம் விடப்படுவதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<<>>>>>>

யானைக்கால் நோயை முற்றிலும் ஒழிக்கும் வகையில் தேசிய அளவில் மேற்கொள்ளப்படும் விழிப்புணர்வு இயக்கத்தை மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா புதுதில்லியில் இன்று தொடங்கி வைத்தார்.

இந்நோய் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ள 13 மாநிலங்களில் அதனை முற்றிலும் தடுக்கும் விதமாக சிகிச்சைகளை முன்னெடுக்கும் வகையிலும், அதுதொடர்பான விழிப்புணர்வை அதிகரிக்கும் வகையிலும் இது மேற்கொள்ளப்படுகிறது.

**Lymphatic Filariasis** எனப்படும் இந்நோய் பாதிப்பிலிருந்து லட்சக்கணக்கான மக்களை காக்கும் வகையில் இது மேற்கொள்ளப்படுவதாக மத்திய சுகாதார அமைச்சகம் கூறியுள்ளது.

**<<<<<>>>>>>**

நடப்பு நிதியாண்டில் நாட்டின் **iPhone** ஏற்றுமதி ஒரு லட்சம் கோடி ரூபாயை எட்டியுள்ளதாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

நாளிதழ் ஒன்றில் எழுதியுள்ள கட்டுரையில் இதனை குறிப்பிட்டுள்ள அமைச்சர், மத்திய அரசின் உற்பத்தியுடன் கூடிய ஊக்கத்தொகை திட்டத்தின் மூலமாக இச்சாதனை நிகழ்ந்திருப்பதாக கூறியுள்ளார்.

அடுத்த நிதியாண்டில் நாட்டின் ஸ்மார்ட் ஃபோன் ஏற்றுமதி 2 புள்ளி இரண்டு ஐந்து லட்சம் கோடி ரூபாயாயை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

**<<<<<>>>>>>**

மக்கள் தொகை கணக்கெடுப்பு விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திருமதி. சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் நடைபெற்ற நேரமில்லா நேர விவாதத்தின்போது பேசிய அவர், மக்கள் தொகை கணக்கெடுப்பு தாமதமாவதன் காரணமாக, சுமார் 14 கோடி பேர் உணவு பாதுகாப்பு சட்டத்தின் பலன்களை பெறமுடியாமல் இருப்பதாக கூறினார்.

நாட்டில் உணவு பாதுகாப்பு சட்டத்தை தீவிரமாக செயல்படுத்த வேண்டும் என்றும், உணவு பாதுகாப்பு என்பது அடிப்படை உரிமை என்றும் திருமதி. சோனியா காந்தி தெரிவித்தார்.

**<<<<<>>>>>>**

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள் . . . .

(சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் உலகின் மிகப் பெரிய ஆன்மிக திருவிழாவான மகாகும்பமேளாவில், குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று பங்கேற்று, திரிவேணி சங்கமத்தில் புனித நீராடினார்.

அதனைத் தொடர்ந்து, அவர் பூஜைகள் மற்றும் பிரார்த்தனைகளை மேற்கொண்டார்.

முன்னதாக, பிரயாக்ராஜுக்கு வருகை தந்த குடியரசுத்தலைவரை, உத்தரபிரதேச ஆளுநர் திருமதி. ஆனந்திபென் பட்டேல் மற்றும் அம்மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் வரவேற்று விழா நடைபெறும் பகுதிக்கு அழைத்துச் சென்றனர்.

குடியரசுத்தலைவரின் வருகையை ஒட்டி, அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மகாகும்பமேளாவில் இன்று அதிகாலை முதல் தற்போது வரை 63 லட்சத்து 75 ஆயிரம் பேர் புனித நீராடியுள்ளதாகவும், இதுவரை 43 கோடியே 53 லட்சம் பேர் புனித நீராடியிருப்பதாக உத்தரபிரதேச அரசு தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, மகா கும்பமேளாவை ஒட்டி இயக்கப்படும் சிறப்பு ரயில்களின் செயல்பாடு குறித்து பிரயாக்ராஜ் ரயில் நிலையத்தில் மத்திய ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

இதையடுத்து செய்தியாளர்களை சந்தித்துப் பேசிய அமைச்சர், பிரயாக்ராஜில் உள்ள ரயில் நிலையங்கள் சிறப்பாக செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)*

**<<<<<>>>>>>**

தமிழகத்தில் காலியாக உள்ள 2 ஆயிரத்து 642 மருத்துவர் காலிப்பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று மாநிலமக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

தேசிய குடற்புழு நீக்க நாளையொட்டி, சென்னையில் உள்ள அரசு பள்ளி ஒன்றில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய அவர், நாட்டிலேயே முதல்முறையாக குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்குவது, சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட அரசு பள்ளிகளில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

கடந்த ஜனவரி மாதம் 5-ஆம் தேதியன்று தமிழகத்தில் காலியாக உள்ள 2 ஆயிரத்து 553 மருத்துவர் பணியிடங்ளுக்கான தேர்வுகள் நடைபெற்றதாகவும், தற்போது கூடுதலாக 89 பணியிடங்கள் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

விரைவில் அப்பணியிடங்கள் நிரப்பப்பட்டு, பணிநியமன ஆணைகள் வழங்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

<<<<<>>>>>>

நாட்டின் வடமேற்கு மத்திய மற்றும் கிழக்கு பகுதிகளில் அடுத்த 3 நாட்களுக்கு குறைந்தபட்ச வெப்பநிலையில் மாற்றம் இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

குறைந்தபட்ச வெப்பநிலை 2 முதல் 3 டிகிரி செல்சியஸ்வரை உயரக்கூடும் என்று எதிர்பாரக்கப்படுவதாக அந்த மையம் கூறியுள்ளது.

மேற்குவங்கத்தின் இமயமலையை ஒட்டிய பகுதிகள், சிக்கிம், வடகிழக்கு அஸ்ஸாம், நாகாலாந்து, மணிப்பூர், மிஸோரம் மற்றும் திரிபுராவில் அடுத்த இரண்டு நாட்களுக்கு பனிப்பொழிவுடன் லேசான மழை இருக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<<>>>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியின் இன்றைய ஆட்டத்தில் ஒடிசா அணி – பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

<<<<<>>>>>>